**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 2188/ஆ5/2023, நாள்.14.08.2023**

.....

பொருள் பள்ளிக் கல்வி – பள்ளி மன்ற செயல்பாடுகள் – சிறார் திரைப்படம் திரையிடுதல் – ஆகஸ்டு 2023–2024 – அரசு நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 6 முதல் 9–ம் வகுப்பு மாணவர்கள் கண்டுணர்தல் – சிறார் திரைப்படம் திரையிடுதல் – வழிகாட்டு நெறிமுறைகள் – தொடர்பாக

பார்வை சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.34785/எம்/இ1/2023, நாள். 09.08.2023

.....

பார்வையில் காணும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க 2023–2024 ம் கல்வியாண்டில் அனைத்து அரசு நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9–ம் வகுப்பு வரை பயின்று வரும் மாணவர்கள் கண்டுணரும் வகையில், ஜுலை 2023 தொடங்கி, ஒவ்வொரு மாதத்தின் இரண்டாவது வாரத்தில் சிறார் திரைப்படங்கள் திரையிடப்பட்டு வருகிறது.

ஆகஸ்ட் – 2023ஆம் மாதத்தில், "நிலா" என்கின்ற தமிழ் திரைப்படம் (வசனங்கள் அனைத்தும் தமிழ் துணையுரையுடன் ) பள்ளிகளில் திரையிடுதல் சார்பாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி செயல்படுமாறு அனைத்து அரசு நடுநிலை , உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்

//ஒப்பம்//

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள்,
அரசு நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி) வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
3. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம். . (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
4. வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம். மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) மூலமாக
5. உதவி திட்ட அலுவலர், வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)